28th January 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : *நான் பதிலை உரக்கத் தான் படித்தேன். உரக்கப் படித்துமா விளங்கவில்லை. (சிரிப்பு) இதற்கெல்லாம் நான் விடை அளித்துவிட்டேனே.*

Motor vehicles tax

* 218 *Q*.—SRI S. M. ANNAMALAI : *கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சென்னை கார்ப்பரேஷனிலுள்ள மோட்டார் வாகனங்களுக்கு வரி வசூலிக்கப்படுகிறதா?

(இ) அப்படியானால் எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The total amount collected in the period 1st July 1959 to 30th June 1960 is Rs. 1,48,987.10 nP.

SRI S. M. ANNAMALAI : *சென்னை நகரில் இப்பொழுது ஓடுகிற பஸ்களை தேசியமயமாக்குவதற்கு முன்னால், சென்னை கார்ப்பொரேஷன் பஸ்களுக்கு சர்க்கார் வரி வசூலிப்பது கிடையாது. சர்க்காரே இந்த பஸ்களை எடுத்துக்கொண்ட பிறகு, கார்ப்பரேஷன் வண்டிகளுக்கும் வரி வசூலிக்கிறார்கள். இனிமேலாக விட்டுவிடக் கூடாதா? இதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா?*

THE HON. SRI V. RAMAIAH : *கூடுமா, கூடாதா என்கிற பிரச்னையெல்லாம் பொதுவாக பட்ஜெட் விவாதத்தின்போது எடுத்துச் சொன்னால், அரசாங்கம் பரிசீலனை செய்யும். இன்றைக்கு உள்ள விதி முறைப்படி ஸ்தல ஸ்தாபன வாகனங்களுக்கும், சர்க்கார் வரி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.*

SRI N. MARUDACHALAM : *ஸ்தல ஸ்தாபனங்களின் வாகனங்களுக்கு வரி வசூலிப்பது குறித்து, ஸ்தல ஸ்தாபனங்கள் ஏதாவது விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்களா? அவர்கள் கோரிக்கை என்ன?*

THE HON. SRI V. RAMAIAH : *தனிக் கேள்வி வேண்டும்.*

SRI S. M. ANNAMALAI : *ஸார், இந்த வரிகள் வசூலிக்கக் கூடாது என்று சென்னை கார்பொரேஷன் கேட்டிருக்கிறார்களா? அது பரிசீலனை செய்யப்பட்டதா, என்ன முடிவுக்கு வந்தார்கள்?*

THE HON. SRI V. RAMAIAH : *தனிக்கேள்வி வேண்டும்.*

Maniamkaram tax

* 219 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased state—

(*a*) when the proposed legislation for the abolition of the Maniamkaram tax is to be introduced in the Assembly;

(*b*) whether the Government have ascertained the opinion of the M.L.A.'s of the Kanyakumari district in the matter; and